# கொடிகட்டிப் பறக்கும் கொடுமையில்

**த. வளவன்**

"எங்கு பார்த்தாலும் தண்ணீர்; ஆனால் குடிப்பதற்குத் தான் தண்ணீர் இல்லை" என்று ஒரு ஆங்கிலக் கவிஞன் சொன்னதை மெய்ப்பித்து வருகிறது தூத்துக்குடி மாவட்டத்தின் ஒட்டப்பிடாரம் பகுதி. உலக அளவில் 2025ஆம் ஆண்டில் குடிநீருக்கான யுத்தம் துவங்கும் என்பதையும் மெய்ப்பித்து வருகிறது இப்பகுதி.

பல மாநிலங்களிலும் நிலத்தடி நீர் மட்டம் வெகுவாகக் குறைந்து வருவதாக மத்திய நீர்வளத்துறை அறிவித்திருக்கிறது. இதற்கிடையில், 'ஒட்டப்பிடாரம் பகுதி நீர் குடிப்பதற்கு லாயக்கில்லாதது' என்று அறிவிக்க வேண்டிய நிலைக்குக் காரணம் என்ன? இன்றும் ஒட்டப்பிடாரத்தில் நடக்கும் தடையில்லாத தண்ணீர் வியாபாரம் தான் என்று சொல்லிப் போராட்டத்தைத் துவக்கி இருக்கின்றனர் அரசியல் கட்சியினர் மற்றும் விவசாயிகள்.

முற்றிலும் மானாவாரி பாசனத்தை நம்பியிருக்கும் ஒட்டப்பிடாரத்தில் கிணற்று நீர் பாசனமே பிரதானம். கம்பு, சோளம், உளுந்து, பாசிப்பயிறு போன்ற பயிர் வகைகளும் மல்லிகை, கேந்தி போன்ற பூ வகைகளும் ஒட்டப்பிடாரத்தில் மிகவும் பிரபலம். இவற்றின் உற்பத்தி கிணற்றுப் பாசனம் மூலமே நடைபெற்று வந்த நிலையில், நிலத்தடி நீர்மட்டம் திடீரென்று 100, 150 அடிக்கும் கீழே போய்விட்டது. இதனால் கிணற்றுப் பாசனம் மூலம் பயிரிட்டு வந்த விவசாயிகள் தங்களது பாசனத்தை நிறுத்தி வைக்க வேண்டிய துயரமான சூழ்நிலையில் சிக்கியுள்ளார்கள். இதற்கு முக்கியக் காரணம், தூத்துக்குடி மாவட்டத்தில் பெருகி வரும் தொழிற்சாலைகள் ஒட்டப்பிடாரத் தொகுதியைக் குறி வைத்து கடந்த 10 வருடங்களாக நிலத்தடி நீரை உறிஞ்சியதுதான்!

2010ல் இப்படியொரு நிலை உருவாகும் என்று பத்து வருடங்களுக்கு முன்பே எச்சரித்திருந்தனர் சுற்றுப்புறச் சூழல் வல்லுநர்கள். இதனால்தான் கடந்த 2003ல் சுற்றுச் சூழல் அமைப்பினரும், அரசியல் கட்சியினரும் தமது போராட்டத்தைத் தொடங்கினர். ஆனால் அன்று தற்காலிகமாகத் தடை செய்யப்பட்ட தண்ணீர் வியாபாரத்தை படிப்படியாக யாரும் கண்டு கொள்ளாமல் விட்டுவிட, தொடர்ந்து ஆழ்குழாய் போரிங் மூலம் தினசரி லட்சக் கணக்கான லிட்டர் தண்ணீர் ஒட்டப்பிடாரம் பகுதியில் உறிஞ்சப்படுகிறது. இயற்கை வளம் கட்டுப்பாடின்றி 'கொள்ளை' போவது இப்பகுதி விவசாயிகளை விரக்தியில் கொண்டு போய் விட்டிருக்கிறது.

நிலைமை விபரீதமாவதைப் புரிந்துகொண்ட விவசாயிகள் மாவட்ட கலெக்டரிடம் முறையிட்டிருக்கின்றனர். கடந்த மார்ச் 25ல் நடைபெற்ற கூட்டத்தில் அனைத்துக் கட்சிப் பிரமுகர்களும், விவசாயிகளும் 'ஒட்டப்பிடாரத்தில் நிலத்தடி நீர் சுரண்டலை நிரந்தரமாகத் தடை செய்ய வேண்டும்' என்று சீரியஸாக வலியுறுத்தினர். கலெக்டரும் இது குறித்து அதிகாரிகளிடம் விவாதித்தார். ஆனாலும் நிலத்தடி நீர் தங்கு தடையில்லாமல் உறிஞ்சப்படுகிறது. அதற்கு ஆங்காங்கே உள்ள லாரி உரிமையாளர்களுக்கு அதிகாரிகள் கொடுக்கும் அடைக்கலம்தான் காரணம்!

இதுபற்றி 'புதிய தமிழகம்' கட்சியின் தூத்துக்குடி மாவட்ட செயலாளர் பட்டவராயன் நம்மிடம் பேசினார்.

"ஒட்டப்பிடாரம் மட்டுமல்ல... பக்கத்து கிராமங்களான புதியம்புத்தூர், எப்போதும் வென்றான், புதூர் பாண்டியாபுரம் பகுதிகளிலும் நிலத்தடி நீர் மட்டம் அதள பாதாளத்துக்குப் போய்விட்டது. இதனால் விவசாயம் செய்வது என்பது கேள்விக்குறியாகி விட்டது. விவசாயத்துக்குத் தண்ணீர் இல்லாத நிலையில் நிலத்தடி நீரும் அதிவேகமாக உப்புத் தன்மையாகி வருகிறது. இந்த நிலைக்குக் காரணம், அரசும், பொறுப்பில்லாத அரசு அதிகாரிகளும்தான்! அரசு அதிகாரிகள் அரசின் தொழிற்சாலை விதிமுறைகளை மறந்துவிட்டனர். ஒரு தொழிற்சாலை அமைய அரசு அனுமதி கொடுக்க வேண்டும் என்றால் மின் வசதி, தண்ணீர் வசதி, உள்கட்டமைப்பு வசதிகள் இருக்கிறதா என்று யோசித்துதான் அனுமதி கொடுக்க வேண்டும். ஆனால் அரசு அதிகாரிகள் இந்த விதிமுறைகள் எதையும் யோசிக்காமல் அனுமதி கொடுத்து விடுகின்றனர். தண்ணீர் வசதி இல்லாத தொழிற்சாலைகள் கிணறு வைத்திருப்பவர்களைக் காசால் வளைக்கின்றன. பலநூறு அடி போர் போடச் சொல்லி, தினசரி லட்சக் கணக்கான லிட்டர் தண்ணீரை உறிஞ்சி விடுகின்றன. இதை எதிர்த்து போராடி வருகிறது புதிய தமிழகம். தொழிற்சாலைகளுக்குத் தண்ணீர் தர மாற்றுத் திட்டங்கள் இருக்கின்றன. பல லட்சம் லிட்டர் தண்ணீர் வீணாகக் கடலில் போய் கலந்து கொண்டிருக்கிறது. எனவே ஒட்டப்பிடாரத்தில் தண்ணீர் வியாபாரத்தை நிரந்தரமாகத் தடை செய்யக் கோரி மேலும் போராட்டம் நடத்தப்போகிறோம்" என்றார் வேகமாக.

இவரைத் தொடர்ந்து பேசிய 'புதிய தமிழகம்' கட்சியின் தூத்துக்குடி மாவட்ட மாணவர் அணிச் செயலாளர் பாபு, "ஒட்டப்பிடாரம் தொகுதியில் ஏற்கெனவே 'நிலத்தடி நீரை



பாபு



வன்னியராஜ்



பட்டவராயன்